INTERNATIONAL CENTRE FOR PREVENTION AND PROSECUTION OF GENOCIDE
Company Registration No.: 11143022
Head Office : 227, Basement Office, Preston Road, Wembley HA9 8NF, UK
Telephone: +44 (0)786 913 3073 , +44 (0)785 230 4397
email: icppgec@gmail.com website:icppg.org

# ஊடக அறிக்கை

**- உடனடி வெளியீட்டிற்காக -**

27 ஒக்டோபர் 2021

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உள்ளிட்டவர்களிற்கு எதிராக GRC இனால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டமையை வரவேற்பதுடன் கோட்டாபய ராஜபக்சவை கைது செய்வதற்கான பிடிவிராந்தை வெளியிடவும் பிரித்தானிய பொலிஸ் அதிகாரிகளிற்கு ICPPG அழைப்பு.**

**லண்டன்:** உலக உரிமைகள் இணக்கம் (Global Rights Compliance LLP (GRC)) என்ற சட்ட வல்லுனர் அமைப்பினால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் சிறிலங்காவின் ஜனாதிபதி உள்ளிட்ட இலங்கை அதிகாரிகளிற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டமையையும் எதிர்வரும் ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் நவம்பர் 12 ஆம் திகதி வரை கிளாஸ்கோவில் (Glasgow) இல் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 2021 காலநிலை மாற்ற மாநாட்டில் (COP26) கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படும் சிறிலங்கா ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்டவர்களை கைது செய்வதற்கான பிடிவிராந்தை வெளியிடுவதற்காக இவ்வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களை பிரித்தானிய தேசியப் பொலிஸ் அதிகாரிகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டமையையும் ICPPG வரவேற்கிறது.

இலங்கை அரசால் பாதிக்கப்பட்ட 200 தமிழர்கள் சார்பாக, Wayne Jordash QC என்ற சட்ட நிபுணர் தலைமையில், உலக உரிமைகள் இணக்கம் (Global Rights Compliance LLP (GRC)) என்ற சட்ட வல்லுனர் அமைப்பினால் ரோமச் சட்டத்தின் 15 ஆவது சரத்தின் கீழே பாதிக்கப்பட்ட தமிழர்களிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வலுக்கட்டாயமாக நாடு கடத்தல், நாடு திரும்பிச் செல்வதற்பான உரிமையினை மறுதலித்தல், துன்புறுத்தல் ஆகிய மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களின் அடிப்படையிலேயே இந்த வழக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தொடரப்பட்டுள்ளது. இதேவேளை எதிர்வரும் ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் நவம்பர் 12 ஆம் திகதி வரை கிளாஸ்கோவில் (Glasgow) இல் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 2021 காலநிலை மாற்ற மாநாட்டில் (COP26) கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படும் சிறிலங்கா ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட இலங்கை அதிகாரிகளை சர்வதேச அதிகாரவரம்பு கொள்கையின் கீழ் கைது செய்வதற்கான பிடிவிராந்தை வெளியிடுவதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கு பிரித்தானிய தேசியப் பொலிஸ் அதிகாரிகளிற்கு GRC இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களின் பிரதிகளை அனுப்பி வைத்துள்ளது.

GRC யின் தொடர்பாடல்களில் பின்வருவனவற்றை ICPPG முன்னிலைப்படுத்த விரும்புகிறது.

- தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் அல்லது உறுப்பினர்கள் என்று சிறிலங்கா அரசாங்கத்தால் கருதப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிராக, குறைந்தது 2002 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சிறிலங்காவிலும் பிரித்தானியாவிலும் பரவலாகவும் திட்டமிட்ட ரீதியிலும் மேற்கொள்ளப்பட்ட வலுக்கட்டாயமாக நாட்டை விட்டு வெளியேற்றுதல், மனிதாபிமானமற்ற ரீதியில் திரும்பிச் செல்வதற்கான உரிமையினை மறுதலித்தல், துன்புறுத்துதல் ஆகிய மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக முக்கியமான தகவல்களின் சுருக்கத்தினை இந்த முறைப்பாடு வழங்குகின்றது.
- தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான போர் நடந்துகொண்டிருந்த காலத்திலும் 2009 இல் அது முடிவுக்கு வந்தபின்னரும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுக்குச் சொந்தமான சிறிலங்கா அரசாங்கத்தின் அதிகாரிகளால் ஆயிரக்கணக்கான உண்மையான தமிழ் ஆதரவாளர்கள் அல்லது ஆதரவாளர்கள் என்று கருதப்பட்டவர்கள் அல்லது தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் திட்டமிட்ட ரீதியில் கடத்தப்பட்டும், சட்டத்திற்குப் புறப்பாகத் தடுத்துவைக்கப்பட்டும் அல்லது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டும் வந்துள்ளதை உறுதிப்படுத்துகிறது.
- மேலும் இவ்வழக்கு பின்வருவனவற்றை கோடிட்டு காட்டுகிறது.
  - இந்த முறைப்பாடானது பாதிக்கப்பட்ட 200 பேரின் சார்பாகவே மேற்கொள்ளப்படுகின்றது என்றாலும், இவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களானது மேலும் பல்லாயிரக்கணக்கானோர் இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்
  - கோத்தபாய ராஜபக்ச மற்றும் கமால் குணரட்ணவாலும் வழிநடத்தப்படும் சிறிலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளின் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள், சித்திரவதைகள், துன்புறுத்தல் கொள்கைகள்
  - ஆரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்வதால் பாதிக்கப்பட்டவர்கள் நாடு திரும்புவதைத் தடுப்பதுடன், பாதிக்கப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களோ இல்லையோ, அவர்கள் சிறிலங்காவுக்குத் திரும்பிச்சென்றால், அவர்கள் சித்திரவதை, காயங்கள் மற்றும் மரணத்தைச் சந்திக்கக்கூடிய ஆபத்தினை எதிர்கொண்டுள்ளர்கள்.
- இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகளின் செயற்பாடுகள் தொடர்பானவை
  - தமிழீழ விடுதலைப் புலிகளமைப்பிற்குள்ளும் அதன் ஆதரவாளர்களுக்குள்ளும் வேரூன்றிப்போயுள்ள தமிழ்ப்பிரிவினைவாதத்தினை எந்த வழியிலாவது இல்லாதொழிப்பதே இக்குற்றங்களைப் புரிந்த சிறிலங்கா அதிகாரிகளின் முக்கிய நோக்கமாக இருந்துள்ளது/இருக்கின்றது. எனினும் இந்த அரசியல் நம்பிக்கையுடன் இருப்பவர்களுக்கும் அமைதியையும் பாதுகாப்பையும் தாயகம் என்று தாம்

INTERNATIONAL CENTRE FOR PREVENTION AND PROSECUTION OF GENOCIDE
Company Registration No.: 11143022
Head Office : 227, Basement Office, Preston Road, Wembley HA9 8NF, UK
Telephone: +44 (0)786 913 3073 , +44 (0)785 230 4397
email: icppgec@gmail.com website:icppg.org

அழைக்கும் ஒரு இடத்தினையும் தவிர வேறெதையும் விரும்பாத ஆயிரக்கணக்கான சிறிலங்காவின் ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கும் இடையில் சிறிலங்கா அரசாங்கம் எந்தவொரு வேறுபாட்டையும் காட்டுவதில்லை

- இன மற்றும் அரசியல் அடிப்படையில் இக்குற்றச்செயல்களை சிறிலங்கா அரசாங்க அதிகாரிகள் மேற்கொள்கையில், உண்மையில் அவர்கள் இனப்பாகுபாடு மற்றும் துன்புறுத்தல் நடவடிக்கைகளையே புரிந்திருக்கின்றார்கள்.
- சிறிலங்காவிலுள்ள பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இழைக்கப்படும் தொடர்ச்சியான தொல்லைப்படுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள்
- பிரித்தானியாவிலேயே அவர்கள் மீது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் கண்காணிப்புக்கள், தொல்லைப்படுத்தல்கள், துன்புறுத்தல்கள்.

மனித உரிமைகள் பேரவையின் 48வது அமர்வில் ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் Michelle Bachelet வெளியிட்டுள்ள அறிக்கையில், "வருந்தத்தக்க வகையில், மனித உரிமைப் பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மீதான கண்காணிப்பு, மிரட்டல் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்வது மட்டுமல்லாமல், அரசாங்கக் கொள்கைகளை விமர்சிக்கும் மாணவர்கள், கல்வியாளர்கள், மருத்துவ வல்லுநர்கள் மற்றும் மதத் தலைவர்கள் என அவர்கள் மீதும் விரிவடைந்துள்ளது. பல அமைதியான போராட்டங்கள் மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகள் அதிகப்படியான அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்து தனிமைப்படுத்தப்பட்ட மையங்களில் தடுத்து வைத்தல் போன்றனவும் இடம்பெற்றுள்ளன" என தெரிவிக்கப்பட்டுள்ளது.[1]

"ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் அரசாங்கத்தால் நடந்து வரும் துஷ்பிரயோகங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் சுதந்திரம், சிவில் நிர்வாகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி பலவீனப்படுத்தப்படுவதைப் பற்றி தங்கள் எச்சரிக்கையை வெளிப்படுத்த" ஐ.நா மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஐ.நா உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.[2]

"ஜனாதிபதி கோத்தாபாய ராஜபகச உள்ளிட்ட இனப்படுகொலை மேற்கொண்ட தலைவர்களை கைது செய்து, உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதில் தங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதன் மூலம் இங்கிலாந்து அரசாங்கம் தனது வரலாற்றுக் கடமைகளை நிறைவேற்ற வேண்டிய தருணம் இது" என ICPPG யின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி அம்பிகை செல்வகுமார் தெரிவித்தார்.

---

[1] https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?LangID=E&NewsID=27447

[2] https://www.hrw.org/news/2021/09/10/sri-lanka-un-rights-council-scrutiny-crucial

இனப்படுகொலை விசாரணைக்காக இலங்கையை ICC க்கு பரிந்துரைப்பதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபையை வெற்றிகரமாக பிரச்சாரம் செய்வதற்கான முதல் படியாக இந்த முயற்சி அமையும் என்பதுடன் சர்வதேச நீதிமன்றில் (ICJ) சாத்தியமான இனப்படுகொலை வழக்கை கொண்டுவருவதற்கும் இது அடிப்படையாக அமையும் எனவும் என்று ICPPG உறுதியாக நம்புகிறது.

இந்த வாய்ப்பை ஏற்படுத்திய பாதிக்கப்பட்ட 200 பேரின் துணிச்சலிற்கு ICPPG தலைவணங்குகிறது. தமிழ் சமூகத்தின் சார்பாக, Wayne Jordash QC மற்றும் GRC இல் உள்ள சட்டக் குழுவிற்கு இந்த வழக்கை முன்னோக்கி எடுத்துச் சென்றதற்காக எங்கள் மனமார்ந்த நன்றியை பதிவு செய்ய விரும்புகிறோம்.

முற்றும்.

மேலதிக தொடர்புகளிற்கு:

**திருமதி. அம்பிகை செல்வகுமார் BSc, MSc, FCCA, MBA.**

**நிறைவேற்றுப் பணிப்பாளர், சர்வதேச ஆலோசகர், ICPPG**

**தொலைபேசி இலக்கம்: +44 7852 304 397**

**மின்னஞ்சல்: icppguk@gmail.com**

**திருமதி. கிறிஸ்ரி நிலானி காண்டீபன் BSc, MSc, MSc**

**ஊடக இணைப்பாளர், ICPPG**

**தொலைபேசி இலக்கம்: +44 7579 781 744**

**மின்னஞ்சல்: icppgmedia@gmail.com**

INTERNATIONAL CENTRE FOR PREVENTION AND PROSECUTION OF GENOCIDE
Company Registration No.: 11143022
Head Office : 227, Basement Office, Preston Road, Wembley HA9 8NF, UK
Telephone: +44 (0)786 913 3073 , +44 (0)785 230 4397
email: icppgec@gmail.com website:icppg.org

**ICPPG பற்றி:**

இன அழிப்பை தடுத்தல் மற்றும் தண்டித்தலுக்கான சரவதேச மையம் (ICPPG) ஆனது லண்டனில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் (TGTE) ஆரம்பித்து வைக்கப்பட்டது. எனினும் இன அழிப்பினால் பாதிக்கப்பட்ட அல்லது அச்சுறுத்தப்பட்ட அனைத்து மக்களுக்கும் சேவையாற்றும் வகையில் அது சுதந்திரமான ஒரு அமைப்பாகவே இயங்கிவருகிறது. இதன் உடனடியான கவனம் இலங்கையில் நிகழ்ந்த இன அழிப்பின் மீது குவிந்துள்ளது. ICPPG அரசு சார்பற்ற ஒரு அமைப்பாகவும் சுயாதீனமான ஒரு சட்டரீதியான அமைப்பாகவும் இருப்பதுடன் எமது பிரதான இலக்கானது இனஅழிப்பு மேற்கொண்டவர்களுக்கு எதிரான ஆதாரங்களை சேகரித்து நீதி, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்காக செயலாற்றுவதாகும்[3].

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் CJ Koh பேராசிரியரான முத்துக்குமாரசாமி சொர்ணராஜா LLB (Ceylon), LLM (Yale), LLM, PhD, LLD (London) அவர்களின் வழிகாட்டலின் இதன் செயற்பாட்டுத் திட்டம் வரையப்பட்டது. இவர் லண்டன் School of Economics இன் மனித உரிமைகள் மையத்திற்கான சிறப்பு வருகை பேராசிரியர் ஆவார். இவர் கோலாலம்பூரில் உள்ள மலேசிய பல்கலைக்கழகத்தில் சர்வதேச சட்டத்திற்கான துங்கு அப்துல் ரஹ்மான் பேராசிரியராக இருந்தவர். இவர் அவுஸ்திரேலியாவில் உள்ள Tasmania பல்கலைக்கழகத்தின் சட்டப்பள்ளிக்கு தலைவராக இருந்தவர். இவர் இலங்கை பல்கலைக்கழகம், London School of Economics, லண்டன் கிங்ஸ் கல்லூரி மற்றும் யேல் சட்ட பள்ளி ஆகியவற்றில் சட்டம் பயின்றவர்.

2014 இல் சாட்சி வாக்குமூலங்களை சமர்ப்பிப்பது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுடனான நேர்காணல்களை ஒழுங்கமைப்பதன் மூலமாக நாம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு (UNHRC) உதவ ஆரம்பித்தோம். இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப்பது என மார்ச் 2014 இல் மேற்கொள்ளப்பட்ட தனது **A/HRC/25/1** தீர்மானத்தின் படி, "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (*LLRC*), காலத்தில் இலங்கையில் இரு தரப்பாலும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்ட கடுமையான அத்துமீறல்கள் மற்றும் மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் மற்றும் அது தொடர்பான குற்றங்கள் குறித்த விரிவான விசாரணைகளை மேற்கொள்ளவும், தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்வதை தவிர்த்தல் மற்றும் பொறுப்புகூறலை உறுதி செய்தல் என்னும் நோக்குடன் சம்மந்தப்பட்ட நிபுணர்கள் மற்றும் சிறப்பு நடைமுறைக்கான ஆணை பெற்றவர்களின் உதவியினை பெற்று, இவ்வாறான மீறல்கள் மற்றும் அவை சார்ந்த குற்றங்கள் தொடர்பான உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை நிருபணம் செய்யவும்" UNHRC மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகரை

---

[3] http://icppg.org/about/

INTERNATIONAL CENTRE FOR PREVENTION AND PROSECUTION OF GENOCIDE
Company Registration No.: 11143022
Head Office : 227, Basement Office, Preston Road, Wembley HA9 8NF, UK
Telephone: +44 (0)786 913 3073 , +44 (0)785 230 4397
email: icppgec@gmail.com website:icppg.org

கேட்டுக்கொண்டது. ஆணைக்குழுவானது தனது இருபத்து-ஏழாவது கூட்டத்தொடரில் விசாரணைகள் குறித்து வாய்மொழி மூலமாக விளக்குமாறும் தனது இருபத்து எட்டாவது கூட்டத்தொடரில் விரிவான அறிக்கையினை அளிக்குமாறும் உயர்ஸ்தானிகரை கேட்டுகொண்டது. இந்த ஆணையின் பிரகாரம், மனித உரிமைகளுக்கான ஐ.நா ஆணையாளர் ஜெனிவாவினை தளமான கொண்ட OHCHR இன் இலங்கை குறித்த விசாரணை (OISL) இனை அமைத்தார்[4]. இலங்கையின் அதிகாரிகளால் இழைக்கப்பட்ட கடுமையான அத்துமீறல்கள், மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் மற்றும் போர் குற்றங்களை உறுதிப்படுத்தும் OISL ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை 2015 செப்டம்பரில் வெளியிடப்பட்டது[5]. இந்த அறிக்கையின் அடிப்படையில் குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகளை கொண்டுவரும் நோக்கில் தொடர்ந்து நாம் சரவதேச வழக்கு தொடுநர்களுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றோம்.

---

4 https://www.ohchr.org/en/hrbodies/hrc/pages/oils.aspx

5 https://www.ohchr,org/EN/HRBodies/HRC/Regu;arSessions/.../A.HRC.30.CRP.2_E.docx